# மாத்தளை மாநகர சபை
# மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாத்தளை மாநகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாநகர சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக தாய்லாந்தின் Asian Institute of Technology (ATI) நிறுவனத்திலிருந்து 2011 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 704,539 தொகை செயற்திட்ட உதவி ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த உதவிப் பணத்தைச் செலவிடுவதற்காக அதற்காக 2012 மே 10 ஆந் திகதி குறைநிரப்பு பாதீடு ஏற்றுக் கொள்ளப்பட்டு அதில் ரூபா 423,300 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட உதவிப் பணம் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேலும் ஒதுக்கத்தின் கீழ் ரூபா 704,539 தொகையான மீதி காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையான இருந்த வாடிவீட்டுக் கட்டணம் ரூபா 845,250 தொகையாக இருந்த போதிலும் அது ரூபா 362,250 ஆக அதாவது ரூபா 483,000 தொகை குறைவாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய கடை வாடகை மிகைக் கட்டணமான ரூபா 963,834 தொகை பிடியாணைக் கட்டணம் மற்றும் தண்டப்பண வருமானமாக கணக்கு வைக்கப்படாமல் பற்றுச்சீட்டிடப்பட்ட கடை வாடகை வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 73 கடைகளை வாடகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 17,140,068 தொகை பெறவேண்டிய வருமானக் கணக்கின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பல வருடங்களுக்கு முன்னர் அனுமதியற்ற நிர்மாணங்களுக்காகப் பெறப்பட்ட சேவைக் கட்டணம் ரூபா 154,180 தொகை மற்றும் கூட்டுப்பசளை பரல்கள் விற்பனையினால் பெறப்பட்ட வருமானம் ரூபா 763,850 தொகையான மீதி ஐந்தொகையில் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிற்குரியதும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டதுமான ரூபா 780,091 தொகையான செலவினத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்குரியதும் 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டதுமான ரூபா 1,105,822 தொகையான 57 செலவின விடயங்களுக்காகவும் கடன்கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 806,078 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் தளபாடப் பொருத்திகளில் 17 விடயங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1995 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ஆதனக் கடன் வட்டி மற்றும் சம்பளமும் படிகளினதும் கூட்டுத்தொகை ரூபா 2,588,996 தொகை கடன்பட்டோராக கணக்கு வைக்கப்படாமல் முற்கொடுப்பனவுகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

பணத்திலிருந்து தவணை அடிப்படையில் செலுத்துவதற்கு வசதியளிக்கப்பட்ட 73 கடைகளில் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய பணமான ரூபா 17,140,068 தொகை 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 திசெம்பர் 31 கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கச் சொந்தமான 03 வியாபாரத் தொகுதிகளில் 63 கடைகள் பல வருட காலமாக மூடப்பட்டிருந்தமையின் காரணமாக சபைக்கு ஆண்டின் போது உழைக்கக்கூடியதாக இருந்த வருமானமான ரூபா 756,000 தொகை இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 07 ஆம் பந்தி மற்றும் கடைகளை வாடகைக்கு எடுத்த வாடகையாளருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 26 ஆம் பந்தியின் பிரகாரம் வாடகைக்கு எடுத்த தரப்பினரால் சொத்துக்களை விற்பனை செய்தல், கையளித்தல் மற்றும் உப வாடகைக்கு விடல் முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபைக்குரிய 93 கடைகளின் வாடகையாளர்களிருந்தது ரூபா 1,000 தொடக்கம் ரூபா 3,000 வரையிலான இடைவெளியில் வாடகைத் தொகையில் வாடகையாளருடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் வாடகையளாரினால் ரூபா 8,000 தொடக்கம் ரூபா 20,000 வரையான இடைவெளியிலான பெறுமதியில் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டமையினால் 2012 ஆம் ஆண்டில் அண்ணளவாக ரூபா 8,928,000 தொகையான நட்டம் சபையின் நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(உ) 2004 ஆம் ஆண்டின் போது முத்திரையிடப்பட்ட 14 கடைகள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கோ அல்லது மீளப் பெறப்பட்டு ஏனைய தரப்பினருக்கு கையளிப்பதற்கோ பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் கணக்காய்வுத் திகதியான 2013 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் கடைகள் மூடப்பட்டிருந்தன.

### 2.3.3 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) 1989 சனவரி 20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் iv(ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட உப விதிக் கோவையின் XX ஆவது பகுதியின் 21 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம்

உள்ளபடியாக வியாபார முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கும் தரப்பினரின் பெயரில் வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக உப வாடகைக்கு விடப்பட்ட 93 வாடகையாளரின் பெயரில் வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 46,995 தொகையான நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் மிகை மற்றும் பற்றாக் குறைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 ஏனைய வருமானம்

(அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 247(அ)(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏதாவது ஹோட்டல், சிற்றுண்டிச் சாலை, அல்லது தங்குமிடமாகப் பயன்படுத்தக் கூடிய சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல் மற்றும் மூன்று தங்குமிடங்களிலிருந்து மீளாய்வாண்டில் கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான நீர் வழங்கல் முறைமை 2001 ஆம் ஆண்டின் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கும் போது காணப்பட்ட நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 4,802,812 தொகையான மீதி உரிய நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து அறவீடு செய்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 1,870,710 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 11,920,160 |

(எ) இலங்கைக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் பந்தியின் பிரகாரம் அவசர கடமைகளுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவுகள் பொதுவான கட்டண அளவில் அரைவாசியாகச் செலுத்த முடியாக இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் தீயணைப்புப் பிரிவில் இரண்டு தீயணைப்பாளர்களுக்காக முழுமையான கட்டண அளவும் மேலதிக நேரப்படியாகச் செலுத்தப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 99,604 தொகை மேலதிக நேரப்படியாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.4, 3.4 மற்றும் 3.6 ஆம் பந்திகளின் பிரகாரம் போட்டியாளர்களின் விலை கோரல் முறைமையைப் பின்பற்றி கொள்வனவுகளைச் செய்யவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் நேரடிக் கூறுவிலைகளின் அடிப்படையில் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,431,662 தொகையில் பல்வேறு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஐ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 264 இன் பிரகாரம் சகல கொடுப்பனவுகளுக்கும் உரிய பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 110,150 தொகையான கொள்வனவுகளுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 610 இன் பிரகாரம் வெளிநாட்டு உதவி தொடர்பான சகல விடயங்களும் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் செய்யப்பட வேண்டும். அந்த நியமங்களுக்கு முரணாக சுண்ய செயற்திட்டத்திற்காக International Council for Local Environmental Initiatives (ICLEI) South Asia என்ற பெயருடைய அரச சார்பற்ற நிறுவனத்தின் மூலம் யூரோப்பிய சங்கத்தில் ரூபா 2,526,255 தொகையான வெளிநாட்டு உதவி சபையினால் நேரடியாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உதவி பெறப்பட்டிருந்ததுடன் அந்த நிதிதயத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு ஏற்ப வினைத்திறனான பங்களிப்புக் கிடைத்திருந்தமை வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொர்பாக இந்தியாவில் புதுடில்லி நகரத்திலும் நேபாளத்தில் காத்மண்டு நகரத்திலும் நடைபெற்ற செயலமர்வுகளுக்காக நகராதிபதி, இரண்டு மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் சபையின் இரண்டு உத்தியோகத்தர்களைப் பங்குபற்றச் செய்வதற்காக ஏற்பட்ட ரூபா 976,861 தொகையான செலவினம் தொடர்பாக சபை அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவ பயிற்சிச் செயலமர்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 நவம்பர் 29 ஆந் திகதி தொடக்கம் 2012 திசெம்பர் 01 ஆந் திகதி வரை பலாங்கொடையில் நடைபெற்ற கழிவுப் பொருள் முகாமைத்துவ பயிற்சிச் செயலமர்விற்குச் செல்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட சபைக்குச் சொந்தமான 61-4253 ஆம் இலக்க வாகனத்தின் ஓட்டக் குறிப்பின் பிரகாரம் 215 கி.மீற்றர் ஓடுவதற்காக 11 மணித்தியாலமும் திரும்பிவருவதற்காக 13 மணித்தியாலமும் எடுக்கப்பட்டிருந்தது. பீபீ-7108 ஆம் இலக்க வாகனத்தின் ஓட்ட அட்டவணையின் பிரகாரம் அந்த பயிற்சிச் செயலமர்விற்குச் செல்வதற்காக 280 கி.மீற்றர் ஓடுவதற்காக 18 மணித்தியாலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் துூர அளவுகள் மற்றும் காலங்கள் காண்பிக்கப்பட்டிருந்தன. பயிற்சிச் செயலமர்வு முடிவடைந்ததன் பின்னர் பீபீ-7108 ஆம் இலக்க வாகனம் கொழும்பின் ஊடக மாத்தளை செல்வதற்கு 436 கி.மீற்றர் துூரம் ஓடப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பலாங்கொடையிலிருந்து கொழும்பு சென்றதற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பலாங்கொடைக்குச் செல்வதற்காக சபைக்குரிய இரண்டு வான் வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டு உத்தியோகத்தர்களைக் கொண்டு செல்ல இருக்கும் போது அந்தச் செயலமர்விற்குச் செல்வதற்கான வாகன வசதிக்காக தனியார் நிறுவனத்திலிருந்து வாடகை அடிப்படையில் வாகனம் பெறப்பட்டு ரூபா 14,400 செலுத்தப்பட்டமைக்கான போலியான பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 02 பயிற்சிச் செயலாமர்வில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்காக இலங்கைக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4:1 ஆம் பிரிவின் பிரகாரம் உணவு மற்றும் தங்குமிடங்களுக்காக ரூபா 34,534 தொகையான இணைந்த படிகள் செலுத்தியிருக்கும் போது அந்த

காணப்பட்டது. அவ்வாறே அந்த இயந்திரம் பாதுகாப்பற்றிருக்கும் போது அந்த இயந்திரத்தின் 03 கலப்பையின் கூர்கள் சேதமடைந்திருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் XIII ஆம் பகுதியின் 267(1) ஆம் பந்தியின் பிரகாரம் கட்டளைச் சட்டத்தின் கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் செயற்பாட்டிற்காக தேவையென எழுந்த உபவிதிகளில் செய்யப்பட்ட திருத்தங்கள், அவ்வாறான திருத்தங்களின் பின்னர் அந்த உப விதிகளை ஏற்றுக்கொள்ளல்களும் மாநகர சபையினாலேயே செய்யப்பட வேண்டும். எனினும் 2012 மார்ச் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டு பேணப்படுகின்ற உள்ளக இணைப்பு கொங்கிரீட் சிறுகற்கள் (Inter Lock) மற்றும் சீமெந்து கொங்கிரீட் கல் உற்பத்திச் செயற்திட்டத்திற்காக அவ்வாறான உப விதி ஏற்றுக்கொள்ளப்படாதிருந்ததடன் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உரிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 இனங்காணப்பட்ட நட்டமும் இழப்பும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் நூலக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மாத்தளை பொது நூலம் மற்றும் அலுவிகாரை நூலகம் என்பவற்றில் ரூபா 80,339 பெறுமதியான 647 புத்தகங்கள் மற்றும் பெறுமதி கணிப்பீடு செய்யப்படாத 491 புத்தகங்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 யூலை 15 கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்தப் பற்றாக்குறை தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 99,110 பெறுமதியான 11 கை வண்டில்கள் மற்றும் எண்ணிக்கை இனங்காணப்படாத ரூபா 544,507 பெறுமதியான வண்டில்கள் மற்றும் ரூபா 3,471,010 பெறுமதியான டெக்ரர், ரேலர் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் காண்பிக்கப்பட்ட 03 விடயங்களின் பற்றாக்குறை என்பன அவதானிக்கப்பட்டன.

(இ) 2003 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 546,237 தொகையான இருப்புப் பாற்றாக்குறை மீதி தொடர்பாக முறையான செயல்முறைகள் பின்பற்றப்படாமல் சில வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) 2005 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற நிதி மோசடி செய்யப்பட்ட பணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 26,549 தொகையான மீதி தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப் பொருள் 28.4 தொன் அளவில் தினமொன்றிற்கு சேகரிக்கப்படுவதுடன் அந்த கழிவுப் பொருள்களிலிருந்து 24 தொன் அளவில் எவ்வித மீள் சுழற்சி வேலைத்திட்டங்களுக்கும் ஈடுபடுத்தப்படாமல் மாத்தளை வாரியபொல தோட்டத்தில் சுது கங்கையின் எல்லைப் பகுதியில் அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதனால் பாதசாரிகள் மற்றும் மனித வாழ்விற்கு தாக்கம் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் எவ்வித வேலைத்திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் வலக பொருளாதார மற்றும் சமூதாய ஆணைக்குழுவிலிருந்து (UNESCAP) 2007 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 4,500,000 தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் மாத்தளை டோல வீதியில் நகரசபைக்குச் சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப்பசளைத்தளம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் தேசிய பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூபா 2,752,812 தொகையான நிதி உதவியின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட ஹிக்கொல்ல கூட்டுப்பசளைத் தளத்தில் பசளை உற்பத்திச் செயற்பாடுகளுக்காக 30 வருட காலத்திற்கு 2007 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 04 தொன் அளவிலான கழிவுப் பொருட்கள் சபையின் ஊழியர்கள் மற்றும் டெக்ரர் மூலம் உரிய தளத்திற்குக் கொண்டு செல்லப்படுவதுடன் சபையின் 06 தொழிலாளர்கள் முழுமையாக இச் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டு சபையினால் சம்பளம் செலுத்தப்படுகின்றது. கூட்டுப்பசளை உற்பத்திச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் சபை அச்செயற்பாடுகளுக்கு கட்டணம் அல்லது எவ்வித பிரதிபலனையும் பெறாது தனியார் நிறுவனத்திற்குக் கையளித்திருந்தது.